# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

**19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),**
**Egmore, Chennai – 600 008.**
**Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377**
**Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in**


**முன்னிலை : திரு.ஆ. தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல் முறையீட்டு மனு எண் 81 / 2015**

திரு. B. சந்திரசேகரன்,
எண் 3, மறுமலர்ச்சி இல்லம்,
கோட்டைத்தெரு,
ஆலங்காயம் அஞ்சல்,
வாணியம்பாடி வட்டம்,
வேலூர் மாவட்டம். ..... மேல் முறையீட்டாளர்
(திரு. B. சந்திரசேகரன்)

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
கரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கோவை ரோடு,
கரூர் – 639 002. ...... எதிர் மனுதாரர்
(திரு. C.S. பெஞ்சமின் நேசமணி,
உதவி செயற்பொறியாளர்)
சிந்தாமணிப்பட்டி &
(திரு. K. பத்ரிநாராயாணன்
உதவி கணக்கு அலுவலர்)

**கேட்புரை நாள் : 12.01.2016 மற்றும் 27.5.2016**

**ஆணை நாள்: 21.07.2016**

திரு. B. சந்திரசேகரன், ஆலங்காயம் அவர்களின் 7.10.2015 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண் 81/2015 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறை தீர்ப்பாளரின் கேட்புரை 12.1.2016 மற்றும் 27.5.2016 ஆகிய நாட்களில் நடத்தப்பட்டது. மேல் முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர் மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள், இரு தரப்பினராலும்

கேட்புரையின் பொழுது எடுத்துரைத்த வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின் குறைதீர்ப்பாளரால் கீழ் கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

### 1. மேல் முறையீட்டாளரின் கோரிக்கை:

1. திருமதி. கச்சம்மாள் பெயருக்கு வழங்கிய மின்னிணைப்பை ரத்து செய்ய வேண்டும்.
2. திரு. தாமோதரன் பெயரில் மின் இணைப்பு எண் 053–007–73 ஐ மாற்றம் செய்தது தவறு என்றும் அந்த பெயர் மாற்றத்தை ரத்து செய்ய வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

### 2. வழக்கின் சுருக்கம்:

2.1. விவசாய மின்னிணைப்பு எண் 053–007–73, 22.10.1996 அன்று திருமதி கச்சம்மாள் பெயரில் வழங்கப்பட்டுள்ளது. அந்த மின்னிணைப்பின் அனுமதிக்கப்பட்ட பளு 7.5 HP ஆகும். மேற்கண்ட மின்னிணைப்பு சிந்தாமணிப்பட்டி கிராமியம் தெற்கு பிரிவின் ஆளுகைக்கு உட்பட்டது.

2.2. திருமதி கச்சம்மாள் பெயரிலிருந்த விவசாய மின்னிணைப்பு 25.11.2011 அன்று திரு. நா. தாமோதரன் என்பவர் பெயரில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

2.3. மேல் முறையீட்டாளர், மேற்கண்ட பெயர் மாற்றம் தவறான ஆவணங்களின் அடிப்படையில் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்து பெயர் மாற்றத்தை ரத்து செய்ய வேண்டும் என்று கரூர் மின் பகிர்மான வட்டத்தின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு மனு செய்துள்ளார். மேலும், மின் இணைப்பையும் ரத்து செய்ய வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

2.4. மன்றம் அவருடைய மனுவை தன்னுடைய 11.9.2015 நாளிட்ட ஆணையில் தள்ளுபடி செய்து விட்டது. மேற்கண்ட மன்றத்தின் தீர்வில் அதிருப்தியுற்ற மேல்முறையீட்டாளர், இந்த மேல் முறையீட்டு மனுவை மின் குறைதீர்ப்பாளர் முன்பாக சமர்ப்பித்துள்ளார்.

3. <u>மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் தீர்வு:</u>

கரூர் மின் பகிர்மான வட்டத்தின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய 11.9.2015 நாளிட்ட ஆணையில் அளித்த தீர்ப்பின் சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

> *"31.8.2009 அன்று சார் பதிவாளர் / தரகம்பட்டி ஆவண எண் 222/2009 ன்படி திருமதி என்.கச்சம்மாள் க/பெ. நாராயணசாமி நாயுடு என்பவரிடமிருந்து திரு.தாமோதரன் அவர்கள் புல எண் 330 ல் உள்ள விவசாய மின்னிணைப்பு எண் 053–007–73 TF IV / 7.5 HP விற்கிரயம் மூலம் பெற்றுள்ளார் என்றும் ஆவண எண் 804/15.7.2005 ன்படி ஏற்கனவே அவருக்கு கிணற்றில் முழு பாத்தியமும் வழங்கப்பட்டு உள்ளது என்றும் தெரிவித்தார்.*
> *எனவே மேற்கண்ட ஆவணங்களின்படி உதவி கணக்கு அலுவலர் / வருவாய் பிரிவு / குளித்தலை அவர்கள் கடித எண் செ.பொ./ வ.பி./ குளி/ உ.க.அ./ வரி.ந/ க.மே.1/ உதவி/ அ.எண்.75/2009 நாள் 25.11.2009 ன்படி பெயர் மாற்றம் முறையாக செய்யப்பட்டுள்ளது.*
> *விசாரணையின் முடிவில் கீழ்கண்ட உத்திரவு வழங்கப்படுகிறது.*
> *ஆவணங்களின் அடிப்படையில் மேற்கண்ட விவசாய மின்னிணைப்பினை தாமோதரன் என்பவருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது முறையானதாக உள்ளது."*

4. <u>மேல் முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள் :</u>

4.1. அவரது மனு மீது விசாரணை செய்த கரூர் குறைதீர் மன்றம் அவரது வாக்குமூலத்தைப் பதிவு செய்ய மறுத்தும், அவர் எழுப்பிய சட்டப்பிரச்சனைகளை பதிவு செய்ய மறுத்தும் ஒரு தரப்பாக முடிவெடுத்து தீர்ப்பு வழங்கியுள்ளது.

4.2. நீதிமன்ற டிகிரி ஆனதை மறைத்து மின்னிணைப்பு பெற்றது குறித்தும் அதை அவர் ரத்து செய்ய கோரியதையும் விசாரணையின் போது எடுத்துக் கூறியும் அதற்கு எவ்வித தீர்வும் காணாமல், தீர்ப்புரையும் வழங்காமல் விடப்பட்டுள்ளது.

4.3. மேற்கண்ட வழக்கில் மின்னிணைப்பை மட்டும் ஒருவரிடமும் அந்த மின்னிணைப்பு அமைவிடத்தை ஒருவரிடமும் பெற்று பெயர் மாற்றம் செய்ய மின் வாரிய விதிகளில் இடமும் சாத்திய கூறும் இல்லை என உதவி மின்பொறியாளர் அவர்கள் அளித்த ம.வ.எண்.21 நாள் 2.7.2015 மேற்கோள் காட்டியும் மேற்கண்ட மின்னிணைப்புக்கு உரிமையாளர் தமிழ்நாடு மின்சார வாரியம் தான், பயனீட்டாளர் மட்டுமே திருமதி கச்சம்மாள் ஆவார். நிலைமை

இவ்வாறு இருக்க இவர் மின்னிணைப்பை மட்டும் விற்பனை செய்தது முற்றிலும் சட்ட விரோதம் ஆகும். இதை மின் நுகர்வோர் குறைதீர் மன்றம் கவனத்தில் கொள்ள மறந்து விட்டது.

5. <u>எதிர் மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்:</u>

5.1. கரூர் மின்பகிர்மான வட்டம், குளித்தலை கோட்டம், சிந்தாமணிப்பட்டி உபகோட்டம், சிந்தாமணிப்பட்டி தெற்கு ஊரகம் மின் பிரிவைச் சேர்ந்த நரியம்பட்டி மின் பகிர்மானத்தில் திருமதி கச்சம்மாள் க/பெ. நாராயணசாமி நாயுடு என்பவருக்கு மின்னிணைப்பு எண் 053–007–73, 7.5 HP மின்பளுவில், 22.10.1996 ல் விவசாய மின்னிணைப்பு வழங்கப்பட்டது.

5.2. திருமதி கச்சம்மாள் அவர்கள் மகனான திரு. தாமோதரன் அவர்கள் 24.11.2009 ல் மேற்படி மின்னிணைப்பினை அவரது பெயருக்கு பெயர் மாற்றம் கோரி மனு செய்தார். அவரது மனுவுடன் கீழ்கண்ட ஆவணங்கள் இணைத்து சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அவை:

1. மின்னிணைப்பு பெயர் மாற்றம் செய்யக்கோரும் படிவம்
2. கிராம நிர்வாக அலுவலர் நான்குமால் சான்று
3. மின்கட்டண அட்டை நகல்
4. வரி வாய்தா ரசீது
5. மின்னிணைப்பு அமைந்துள்ள நிலத்தின் வரைபடம்
6. சிட்டா நகல்
7. அடங்கல்
8. கிரைய பத்திர நகல் ஆவண எண் 804/2005, 222/2009
9. பிணையுறுதி பத்திரம்
10. ஒப்பந்தம்

5.3. சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து வருவாய் மற்றும் பத்திர நகல்கள் முறையாக பரிசீலிக்கப்பட்டு மனு செய்த நாளில் மேற்படி மின்னிணைப்புக்கு முழு உரிமையாளர் திரு தாமோதரன் தான் என்பதை உறுதி செய்த பின்னர் செயற்பொறியாளர் / இயக்கலும் காத்தலும் / குளித்தலை வருவாய் பிரிவு, உதவி கணக்கு அலுவலர் அவர்களால் 25.11.2009 ல் மேற்படி

மின்னிணைப்பினை திருமதி கச்சம்மாள் பெயரிலிருந்து அவரது மகனான திரு தாமோதரன் என்பவருக்குப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

5.4. எனவே, மேற்படி விவசாய மின்னிணைப்பு எண் 053–007–73 ஐ, திருமதி கச்சம்மாள் பெயரிலிருந்து திரு. தாமோதரன் என்பவரது பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. ஆவணங்களின் அடிப்படையில் முறையாக உள்ளது எனப் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

## 6. <u>மின் குறைதீர்ப்பாளரின் கேட்புரை:</u>

6.1. மேல்முறையீட்டாளர், எதிர்மனுதாரர் ஆகிய இருவரும் தங்களுடைய வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 12.1.2016 மற்றும் 27.5.2016 ஆகிய நாட்களில் மின் குறைதீர்ப்பாளர் முன்பாக கேட்புரை நடத்தப்பட்டது.

6.2. மேல்முறையீட்டாளர் திரு. B. சந்திரசேகர் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

6.3. எதிர்மனுதாரர் சார்பில் திரு. C.S. பெஞ்சமின் நேசமணி, உதவிச் செயற்பொறியாளர் / சிந்தாமணிப்பட்டி அவர்களும் . திரு. K. பத்ரி உதவி கணக்கு அலுவலர் அவர்களும் கலந்து கொண்டு தங்களுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தனர்.

## 7. <u>கேட்புரை நாளில் மேல் முறையீட்டாளர் எடுத்துரைத்த வாதங்கள்:</u>

7.1. மேல்முறையீட்டாளர் திரு. B. சந்திரசேகரன் அவர்கள் தன்னுடைய மேல்முறையீட்டு மனுவிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

7.2. மேலும், தன்னுடைய வாதங்களை எழுத்துப்பூர்வமான வாக்குமூலத்தையும் கேட்புரையின் பொழுது அளித்தார். அவைகள், வாதமாகவும் கேட்புரையின் பொழுது தெரிவித்தார். அந்த வாதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(i) திருமதி. கச்சம்மாள் அவர்களுக்கு 22.10.1996–ல் மின்இணைப்பு வழங்கப்பட்ட தேதியில் சர்வே எண்.330–ல் வெறும் 35 சென்ட் நிலம் மட்டுமே அவருக்கு இருந்தது. இந்த இடத்தில் தான் கிணறு தோண்டப்பட்டு சுற்றிலும் உத்திகள் அமைக்கப்பட்டு விவசாயம் செய்வதற்கு எவ்வித இடமும் இல்லாமல் இன்றைய தேதி வரையில் உள்ளது. (ஆதாரம் கிரைய ஆவண எண்.93/1985 ஆகும்).

(ii) திருமதி. கச்சம்மாளுக்கு மின் இணைப்பு வழங்கிய போது நிலத்தின் பட்டா, சிட்டா, அடங்கல் வரைபடம் என எந்த ஆவணமும் பெறப்படவில்லை.

(iii) அவருக்கு (கச்சம்மாள்) சர்வே எண்.331–ல் 4.32 ஏ.செ. நிலம் உள்ளது. (ஆதாரம் பத்திர பதிவு எண்.1274/1984).

(iv) அவர் மின்சார இணைப்பு பெறுவதற்கு முன்பே கரூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் வழக்கு எண்.1088/95–ன் மூலம் 10.6.1996ல் நீதிமன்றம் மூலம் டிகிரி செய்யப்பட்டது. இதை இவர் மின் இணைப்பு பெறும்போது கூறாமல் மறைத்துவிட்டார்.

(v) டிகிரியின் தொடர்ச்சியாக குளித்தலை உரிமையியல் நீதிமன்றத்தில் நிறைவேற்று மனு எண்.74/97–ன் மூலம் ஜப்தி செய்யப்பட்டு 6.9.2000–ல் அன்று நடைபெற்ற ஏலத்தில் திரு. சதாசிவம் என்பவர் சர்வே எண்.330ல் கிணறு அமைந்துள்ள 35 சென்ட் நிலத்தை (மின்னிணைப்பு தவிர்த்து) ஏலம் எடுத்து இதை 14.11.2000ல் நீதிமன்றம் மூலம் கிரைய உறுதி, சுவாதீனம் பெற்றுள்ளார். இதனால் மேற்படி மின்இணைப்பு அமைந்துள்ள கிணற்றின் உரிமையாளர் சுவாதினதாரர் உரிமையை திருமதி. கச்சம்மாள் அன்றைய தேதியிலே இழந்து விடுகிறார். மேலும், அவருக்கு உரிமையான சர்வே எண்.331–ல் உள்ள 4.32 ஏ.செ நிலத்தையும் 10.11.05ல் திரு. பாலகிருஷ்ணனுக்கு கிரைய ஆவணம் 1347ன் மூலம் விற்பனை செய்து விட்டார். இந்நிலையில் அவருக்கு 10.11.2005ல் மேற்படி சர்வே எண்.களில் எவ்வித சொத்தும் இல்லாத நிலையில் 31.8.2009ல் திரு– தாமோதரன்

அவர்களுக்கு 31.8.2009ல் பதிவு கிரைய ஆவணம் 222/09ன் மூலம் மேற்படி மின்இணைப்பு எண்.73,7.5 எச்.பி.–ஐ மின்சார வாரிய விதிமுறைக்கு உட்பட்டு அவருக்கு உரிமையோ சுவாதினமோ இல்லாத நிலையில் பதிவு செய்து தந்துள்ளார்.

7.3. விவசாய மின்னிணைப்பு எண் 73 (IV 7.5 HP) ஐ ரத்து செய்ய கோரும் வாதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(i) O.S. No.435/1993, IA.No.705/1993–ல் வழக்குரையில் நாராயணசாமி அய்யர் & கோ எதிர் கச்சம்மாள் வழக்கில் இச்சொத்தை சர்வே எண்.330–ல் உள்ள 35 செண்ட் கிணற்றை–1வது அயிட்டமாக பணத்திற்காக பற்றுவகை செய்ய வழக்குரையில் கூறப்பட்டுள்ளது. இதனடிப்படையில் அசல் வழக்கு எண்.1088/95ன் அடிப்படையில் 21.6.1996ல் டிகிரி செய்து தீர்ப்புரை பகரப்பட்டது. இதற்கு ஆதார ஆவணம் இதனுடன் இணைத்து அனுப்பப்படுகின்றது.

(ii) திருமதி. கச்சம்மாள் அவர்கள் சர்வே எண்.330ல் உள்ள 35 செண்ட் நிலத்தை, கிணற்றை 22.6.1993ல் தான செட்டில்மெண்டின் மூலம் பதிவு செய்துள்ளார். தன் மகன்களுக்கு பாலகிருஷ்ணன், ராமசாமி, துரைச்சாமி, தாமோதரன் தண்டபாணி அவர்களுக்கு பதிவு செய்து அதனுடைய சுவாதீனத்தை அன்றே அவரிடம் ஒப்படைத்துள்ளார். இதற்கு ஆதாரமாக சொத்து தொடர்பான வில்லங்க சான்றிதழை இத்துடன் இணைத்துள்ளார். மேலும் இதைத் தொடர்ந்து அ.வ. எண்.1088/95ல் பாத்திய மனுதாரர்களாக பாலகிருஷ்ணன் ராமசாமி, தாமோதரன் வழக்கு தொடர்ந்துள்ளனர். அதற்கு ஆதாரமாக வழக்கு ஆவணத்தையும் இணைத்துள்ளார்.

(iii) ஆகையால் தாமோதரன், துரைச்சாமி தண்டபாணி மீது தானசெட்டில்மெண்ட் அடிப்படையில் இக்கிணறு அமைவிடம் சொந்தமாக இருந்த காரணத்தினால் பட்டா, சிட்டா வருவாய் ஆவணங்களை வழங்காமல் தவறான வழியில் மின் இணைப்பு பெற்றதால்

இம்மின்இணைப்பு சட்ட விரோதமாக பெறப்பட்டது எனக் கருதி ரத்து செய்ய கோரப்படுகிறது.

7.4 திரு. தாமோதரன் பெயரில் மாற்றப்பட்ட பெயர் மாற்ற உத்தரவை ரத்து செய்ய கோரும் வாதங்கள் பின்வருவன

(i) திரு. தாமோதரன் சர்வே எண்.330ல் உள்ள கிணற்றை திரு. சதாசிவம் என்பவரிடமிருந்து 15.6.2005ல் கிரைய ஆவண எண்.804/2005ன் மூலம் கிணறும் அதன் சுற்றியுள்ள இடத்தை மட்டுமே கிரையம் பெற்றுள்ளார்.

(ii) திருமதி. கச்சம்மமாள் என்கிற மின் நுகர்வோரிடமிருந்து மின்நுகர்வோர் எண்.73ஐ மட்டும் 31.8.2009ல் கிரைய ஆவண எண். 222/2009ல் மின்இணைப்பை விற்பனை செய்துள்ளார். தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித்தொகுப்பு 2004, விதி 2(g) ன் படி திருமதி. கச்சம்மாள் மின் நுகர்வோர் மட்டுமே, ஆனால், மின் உரிமையாளர் தமிழ்நாடு மின்சார வாரியம் மட்டுமே ஆகும். இந்நிலையில் இவர் உரிமைதாரர் போன்று விற்பனை செய்துள்ளார்.

(iii) திரு. தாமோதரன் மின்சார ஒழுங்குமுறை விதி 5(7)ன் படி படிவம் ஒன்று (1) அல்லது இரண்டு (2) அளிக்கவில்லை. வாரியமும் பெறவில்லை, பெயர் மாற்றம் செய்ய வாரிய விதிமுறைகளின்படி இப்படிவங்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

(iv) திரு. தாமோதரன் அளித்த விண்ணப்பங்களில் விண்ணப்ப தேதி 1.10.2009, 24.11.2009 என இரு தேதிகள் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே இவ்விண்ணப்பமே குழப்பமானதாகும்.

(v) 24.11.2009 விண்ணப்பம் பெறப்பட்டு மறு நாளே பெயர் மாற்ற உத்தரவு வழங்கப்பட்டது. ஏதோ உள்நோக்கம் கொண்டதாக தெரிகிறது.

(vi) இவ்வாறாக மின்இணைப்பு அமைந்துள்ள இடத்தை ஒருவரிடமும் (சதாசிவம்) மின்இணைப்பை ஒருவரிடமும் (கச்சம்மாள்) கிரையம் பெற்று பெயர் மாற்றம் விண்ணப்பம் செய்த பெயர் மாற்ற உத்தரவை ரத்து செய்ய கோருகிறார்.

7.5 எதிர்மனுதாரர், பெயர் மாற்றம் உரிய விதிமுறைகளின்படியே செய்யப்பட்டது எனவும் கூறியுள்ளார். இதற்கு ஆதாரமான சட்டப்பிரிவு விதிமுறைகள் எதையும் தெரிவிக்க வில்லை. மின் வழங்கும் உரிமை, உரிமைதாரர் என்ற நிலையில் இருந்து நுகர்வோருக்கு மின் இணைப்பை வழங்குவது மின்சார வாரியம் மட்டுமே எப்பொழுதும் எந்நிலையிலும் உரிமைதாரர் என்கிற உரிமை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மட்டுமே உண்டு நுகர்வோராக உள்ளவர்கள் இடம் அல்லது நிலம் அதில் அமைந்துள்ள மின்இணைப்பு ஆகியவற்றை ஒன்றாகத்தான் விற்பனை செய்ய வேண்டும். தனித்தனியாக வெவ்வேறு நபர்கள் இடம், மின்இணைப்பை விற்பனை செய்ய வாரிய விதிமுறைகள் அனுமதிப்பதில்லை.

7.6 மேலும், எதிர்மனுதாரர் விசாரணை செய்த பொழுது புகார்தாரரிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலங்கள் ஆவணங்கள் எதையும் இம்மன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை. மேலும், தனது தீர்ப்பில் எந்த விதிமுறைகளின்படி கீழ் பெயர் மாற்றம் செய்தது சரி என கூறவேயில்லை. மின்இணைப்பு ரத்து பற்றியும் தனது தீர்ப்பில் கூறவில்லை. ஆகவே இம்மேல்முறையீட்டு மன்றமாவது வாரிய விதிமுறைகளின்படி மின் இணைப்பையும், மின்இணைப்பு பெயர் மாற்ற உத்தரவையும் ரத்து செய்ய பணிவுடன் கோருகிறார்.

7.7 மேல்முறையீட்டாளர், தன்னுடைய தந்தையும் திருமதி. கச்சம்மாளின் தான செட்டில்மென்ட் ஆவணத்தின்படி மேற்கண்ட நிலத்தின் உரிமையாளர்களில் ஒருவர் என்றும் ஆனால், அவர் திருமதி. கச்சம்மாளின் பெயரில் மின் இணைப்பு வழங்கலாம் என்று சம்மத கடிதம் எதுவும் தரவில்லை என்றும் தெரிவித்தார்.

8. <u>எதிர் மனுதாரர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்:</u>

8.1. எதிர்மனுதாரர்களின் சார்பில் கலந்து கொண்ட திரு. பெஞ்சமின் நேசமணி, உதவிச் செயற் பொறியாளர், சிந்தாமணிப்பட்டி அவர்களும், திரு. பத்ரி நாராயணன் உதவி கணக்கு அலுவலர் அவர்களும் எதிர் மனுதாரருடைய பதிலுரையிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

8.2. உதவிச்செயற்பொறியாளர் அவர்கள், மின்னிணைப்பு வழங்கும் பொழுது மேற்கண்ட விவரங்கள் எதுவும் உரிமம்தாரரின் பார்வைக்கு கொண்டு வரப்படவில்லை என்று தெரிவித்தார்.

8.3. மேலும், கரூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் வழக்கு எண் 1088/95 ல், கச்சம்மாள் M/S. நாராயணசாமி ஐயர் அண்ட் கோ அவர்களுக்கு கொடுக்க வேண்டிய பணம் பற்றி டிகிரி தீர்வு தான் 21.1.1995 நாளிட்ட தீர்வில் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அதில் மேற்கண்ட சொத்துபற்றி எதுவும் கூறப்படவில்லை. எனவே, டிகிரியான நாளிலிருந்து சொத்து திருமதி கச்சம்மாளுக்கு உரிமையில்லை என்ற வாதம் தவறானது. அந்த சொத்து எப்பொழுது ஏலம் விடப்பட்டதோ, அப்பொழுது தான் அவர் அந்த சொத்தின் மீது உரிமை இழக்கிறார். Execution Petition 74/97 ன்படி 6.9.2000 ல் தான் ஏலம் நடைபெற்றது. எனவே, மின்னிணைப்பு வழங்கிய நாளான 22.10.1996 ல் திருமதி கச்சம்மாள் அவர்கள் தான் சொத்தின் உரிமையாளர் என்பதால் விவசாய மின்னிணைப்பு வழங்கியது சரிதான் என்று வாதிட்டார்.

8.4. மேலும், தற்பொழுது மேற்கண்ட கிணற்றின் உரிமையாளர் திரு. தாமோதரன் என்பதாலும், அவர் அந்த கிணறு மற்றும் இடத்தையும், மின்னிணைப்பையும் உரிய ஆவணங்கள் மூலம் வாங்கியுள்ளதால், வாரிய விதிகளின்படி அவரிடம் ஏற்கனவே பத்தி 5.2–யில் தெரிவித்துள்ள ஆவணங்கள் பெறப்பட்டு மின்னிணைப்பு பெயர் மாற்றம்

செய்யப்பட்டுள்ளது. என்றும் மேற்கண்ட பெயர் மாற்றம், மின் வழங்கல் விதித் தொகுப்பில் கூறப்பட்டுள்ள விதிகளுக்கு இணங்கதான் செய்யப்பட்டுள்ளது என்றும் வாதிட்டார்.

8.5. மேற்கண்ட மின்னிணைப்பு பெறுவதற்கு தயார்நிலை பதிவு செய்த பொழுது பெறப்பட்ட ஆவணங்கள் அலுவலகத்தில் கிடைக்கப் பெறவில்லை என்றும், ஆனால், தயார் நிலையை பதிவு செய்யும் பொழுது உரிமை பற்றிய ஆவணங்கள் சரி பார்க்கப்பட்டு தான் தயார் நிலை பதிவு செய்யப்படுவது வழக்கம் என்றும் தெரிவித்து, எனவே தயார் நிலையை பதிவு செய்யும் பொழுது திருமதி கச்சம்மாள் அவர்கள் மேற்கண்ட கிணற்றின் உரிமையாளர் என்பதை உறுதிபடுத்திய பின்பு தான் தயார்நிலையைப் பதிவு செய்யப்பட்டு இருக்க முடியும் என்றும் வாதிட்டார்.

9. <u>எதிர் மனுதாரரின் எழுத்துப்பூர்வமான வாதுரை:</u>

9.1. எதிர்மனுதாரர், மேற்பார்வை பொறியாளர், கரூர் மின் பகிர்மான வட்டம் அவர்கள் தன்னுடைய 13.1.2016 நாளிட்ட எழுத்துப்பூர்வமான வாதுரையில் கீழ்கண்ட வாதங்களைத் தெரிவித்துள்ளார்.

9.2. விவசாய மின்னிணைப்பு எண் 06–053–007–73 7.5 HP புல எண் 330 ல் 0.35 செண்ட் நிலத்தில் திருமதி கச்சம்மாள், க/பெ நாராயணசாமி நாயுடு என்பவருக்கு 22.10.1996 ல் வழங்கப்பட்டுள்ளது. மின்னிணைப்பு வழங்கிய நாளில் நிலத்தின் அளவு ஒரு முக்கிய காரணியாக இருக்கவில்லை. மேலும் அவருக்குச் சொந்தமாக புல எண் 331 ல் 4.32 செண்ட் நிலம் இருந்ததாக தெரிவித்திருந்தார். அதனை மேல்முறையீட்டு மனுதாரர் முதல் பக்கம் பாரா (3) ல் ஒப்புக்கொண்டுள்ளார். மேற்படி நிலம் 10.11.2005 ல் திரு.பாலகிருஷ்ணனுக்கு விற்பனை செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

9.3. மேலும் புல எண் 330 ல் உள்ள 0.35 செண்ட் நிலம் குளித்தலை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மூலம் வழக்கு எண் 1088/95 க்காக டிகிரி செய்யப்பட்டது குறித்து மின்னிணைப்பு வழங்கும் பொழுதோ (அல்லது) திரு. தாமோதரன் த/பெ நாராயணசாமி நாயுடு என்பவருக்கு பெயர் மாற்றம் செய்யும் பொழுதோ எவ்வித ஆட்சேபணையும் மனுதாரரிடமிருந்தோ வேறு நபரிடமிருந்தோ பெறப்படவில்லை என்பதால் வாரியத்திற்கு மேற்படி சொத்தின் மீது நீதி மன்ற வழக்கு நடைபெறுவதும் அது டிகிரி ஆனதும் தெரியாது. மேலும் இவ்வழக்கில் வாரியம் வாதியோ / பிரதிவாதியோ அல்ல என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

9.4. மனுதாரர் 2013 லிருந்து தான் இது தொடர்பாக RTI ல் தகவல் பெற்ற பின்பு தான் தனக்கு தெரியவந்ததாகவும் அதன் பின்பே தான் மின்னிணைப்பை துண்டிக்கவும் பெயர் மாற்றத்தை ரத்து செய்யவும் கோரியதாக நேரடி விசாரணையில் தெரிவித்தார். மேலும், மின்சாரச்சட்டம் 2003 ல் Section 56 ன்படி கீழ்கண்ட காரணங்களுக்காக மட்டுமே ஒரு மின்னிணைப்பை துண்டிப்பு செய்ய இயலும். அவை–

1. மின்கட்டணம் மற்றும் வாரியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய கட்டண நிலுவை செலுத்த தவறும்பொழுது
2. மின் நுகர்வோருக்கும் / வாரியத்திற்கும் ஏற்பட்டுள்ள ஒப்பந்தம் முடிவுறும்பொழுது
3. மின் திருட்டு
4. மின் நுகர்வோர் மின்னிணைப்பை ஆய்வு செய்ய / கணக்கீடு செய்ய தடை செய்யும்பொழுது (24 மணி நேர தாக்கீதுக்குப் பின்)
5. சுற்றுச் சூழல் பாதுகாப்பு கருதி (Water Prevention of Control of Pollution Act 1974, Air Act 1981, Environment Act 1986, etc.)

எனவே மேற்கண்ட நிலைகளை தவிர நீதிமன்றம் ஆணை பிறப்பித்தால் மட்டுமே மின்னிணைப்பைத் துண்டிக்க இயலும் என தெரிவிக்கப்படுகிறது.

9.5. பெயர் மாற்றத்தைப் பொருத்த வரையில் நீதி மன்ற தாவா குறித்து ஏதும் தெரியாத நிலையிலும், மின் நுகர்வோரோ பங்குதாரரோ ஆட்சேபணை ஏதும் தெரிவிக்காத சூழலில் புல எண் 330 ல் உள்ள 0.35 செண்ட் நிலமும், அதில் அமைந்துள்ள கிணற்றின் (ஆவண எண் 804/2005) முழு உரிமையும் திருமதி கச்சம்மாளுக்கு இருந்ததாகக் கருதி மின்னிணைப்பு எண் தனியாக ஆ.எண் 222/2009 ல் அதுவும் திரு. தாமோதரன் த/பெ நாராயணசாமி என்பவரின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்தாலும் ஒரே உரிமையாளர் என்ற வருவாய்துறை ஆவணங்களின் அடிப்படையிலும் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

9.6. மேலும் தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பு 2004 விதி 5(7) ன்படி பாரம் (1) என்பது மின்னிணைப்பு வழங்கப்பட்ட சொத்திற்கு உரிமைதாரர் யார், அதற்கு அவர் இணைக்கும் சட்டப்பூர்வ ஆவணம் எது என்பதை தெரிவிக்கும் பாரம் மட்டுமே.

9.7. மேலும் பாரம் (2) என்பது மின்னிணைப்பு அமைந்துள்ள சொத்தின் உரிமைதாரர் மின்னிணைப்பின் பெயரை மாற்ற தரும் கடிதம் மட்டுமே. இவை இரண்டும் சாதாரண வெள்ளை தாளில் வழங்கினால் கூட போதுமானது. இதற்கு பதிலாக மின்னிணைப்பு பெயர் மாற்றம் செய்ய சொத்தின் உரிமைதாரரான திருமதி கச்சம்மாள் பதிவு செய்யப்பட்ட விற்பனை ஆவணமாக வழங்கியுள்ளார்.

9.8. எனவே மின்னிணைப்பு வழங்கியதும் பெயர் மாற்றம் செய்ததும் சட்டப்பூர்வ ஆவணங்களின் அடிப்படையிலேயே செய்யப்பட்டுள்ளது. மின்னிணைப்பு வழங்கும் பொழுதோ பெயர் மாற்றம் செய்த பொழுதோ நீதி மன்ற வழக்கு நிலுவை, டிகிரி ஆனது எதுவும் வாரியத்திற்கு தெரியாது என்பதாலும், மனுதாரர் தற்போது கோரும் கோரிக்கை காலம் கடந்தது மட்டுமல்லாமல் தற்போதைய சூழலில் மின் நுகர்வோர் திரு.தாமோதரன்

பெயரில் சொத்தும் கிணறும், மின்னிணைப்பு அனுபவ பாத்தியத்திலும் உள்ளது சட்டப்படி சரியே என பணிவுடன் தெரிவிக்கப்படுகிறது.

10. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு:</u>

10.1 இருதரப்பினரின் வாதங்களையும் ஆராய்ந்து பார்க்கும் பொழுது கீழ்கண்டவைகள் வழக்கெழுவினாக்களாகத் தெரிகின்றன.

(i) விவசாய மின்னிணைப்பு வழங்கும் பொழுது, கிணறு உள்ள நிலம், திருமதி கச்சம்மாள் பெயரில் இல்லை. அந்நிலம் அவரது மகன்களுக்கு தான செட்டில்மெண்ட் மூலம் 22.6.1993 ல் சுவாதீனம் செய்துள்ளதால் அந்த மின்னிணைப்பை திருமதி. கச்சம்மாள் பெயரில் வழங்கியது தவறு என்ற வாதம் ஏற்புடையதா ?

(ii) மின்னிணைப்பு வழங்கப்பட்டுள்ள கிணறு உள்ள சர்வே எண் 330 ல் உள்ள 35 செண்ட் திரு. நாராயணசாமி அய்யர் & கோ அவர்களால் தங்களுக்கு வர வேண்டிய பணத்திற்காக தொடரப்பட்ட வழக்கு எண் 1088/95 ல் 21.6.1996 ல் டிகிரி செய்யப்பட்டுள்ளது. எனவே திருமதி கச்சம்மாளுக்கு உரிமையில்லாத நிலையில் அவர் பெயரில் அந்த நிலத்தின் மின்னிணைப்பு வழங்கியது தவறு என்ற வாதம் ஏற்புடையதா ?

(iii) திருமதி கச்சம்மாள் பெயரிலிருந்து, திரு. தாமோதரன் பெயருக்கு விவசாய மின்னிணைப்பு பெயர் மாற்றம் செய்தது விதிகளின்படி சரியானதா ?

11. <u>வழக்கெழு வினா ஒன்றிற்கான தீர்வு:</u>

11.1. மேல்முறையீட்டாளர், திருமதி கச்சம்மாள் அவர்கள் தனக்கு சொந்தமான சர்வே எண் 330 ல் உள்ள 35 செண்ட் நிலத்தை தன்னுடைய புதல்வர்களான (1) திரு. பாலகிருஷ்ணன், (2)

திரு. ராமசாமி, (3) திரு. துரைசாமி, (4) திரு. தாமோதரன், மற்றும் (5) திரு.தண்டபானி ஆகியோருக்கு தான செட்டில்மெண்ட் மூலம் 22.6.1993 ல் வழங்கியுள்ளார். அது ஆவண எண் 565/1993 ஆகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், அதனுடைய சுவாதீனத்தையும் அன்றே ஒப்படைத்து விட்டார் என்று வாதிட்டு அதற்கு ஆதாரமாக, தான செட்டில்மெண்டின் நகல் மற்றும் அந்தச் சொத்து சம்மந்தமான வில்லங்க சான்றிதழ்களையும் சமர்ப்பித்துள்ளார். மின்னிணைப்பு 22.10.1996 ல் தான் திருமதி கச்சம்மாள் பெயரில் வழங்கப்பட்டுள்ளது. எனவே, மின்னிணைப்பு வழங்கிய நாளில் திருமதி கச்சம்மாள் அவர்கள் அந்த கிணறு உள்ள நிலத்திற்கு உரிமையாளர் அல்ல. அந்நிலையில் அவருடைய பெயரில் மின்னிணைப்பை பெற்றது சட்ட விரோதம் என்று வாதிட்டு அந்த மின்னிணைப்பை ரத்து செய்ய வேண்டும் என்றும் வாதிட்டுள்ளார்.

11.2. மேலும், அ.வ.எண்.1088/95 ல் திரு. பாலகிருஷ்ணன், ராமசாமி, தாமோதரன், அவர்கள் மேற்கண்ட சொத்தில் உள்ள ஜப்தி சம்மந்தமாக வழக்கு தொடுத்துள்ளார்கள் என்பதையும் சுட்டிக்காட்டி. அதற்கு ஆதாரமாக வழக்கு ஆவணத்தையும் அளித்துள்ளார்.

11.3. இந்த மின்னிணைப்பு வழங்கப்பட்ட நாள் 22.10.96. அப்பொழுது, மின்சார வாரியத்தின் Terms and Conditions தான் அமலில் இருந்தது. எனவே வாரியத்தின் ஆணைகள் தான் அப்பொழுது வழங்கிய மின்னிணைப்புகளுக்குப் பொருந்தும்.

11.4. இந்த வழக்கெழு வினா சம்பந்தமாக நான் வாரியத்தலைவர் அவர்கள் Circular Memo No.SE/IEMC/EE3/AEE2/507/90 (Tech. Branch) dated 15/11/1990 ஆராய விரும்புகிறேன். அந்த ஆணை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“ <u>Circular Memo No.SE/IEMC/EE3/AEE2/507/90 (Tech. Branch) 15-11-90</u>*

*Sub : Extension of supply to the agricultural pumpsets in the name of application for the landed properties which are in the name of their father / wife/mother etc., - Reg.*

*Ref : Lr.No.CED/MSR/T2/D.2109/90, dated. 30-8-90.*

****

*It has been stated that there are cases where agricultural parties have applied for extension of supply to their agricultural pumpsets in their name, for the landed properties which are in the name of their father/wife/mother etc., and represented for considering their request for name transfer etc., within 90 days notice period issued to them.*

*After careful consideration of the above, the following general instructions are issued for effecting supply in case of applicant not being the owner of land/well at the time of preferring the application while the owner being a close relative of the applicant.*

*(i) Supply may be effected in the name of the owner by getting a fresh application and under the same priority.*

*(ii) Supply may be effected in the name of the applicant provided the present owner transfers the ownership to the applicant (ie) after name transfer and under the same priority.*

*(iii) Supply may be effected in the name of the applicant if the owner gives No Objections Certificate and under the same priority. If it involves legal heirs, then village administrative officer's certificate to this effect and consent of the co-owners may also be obtained.*

*T.V. Antony,*
*Chairman "*

11.5. மேற்கண்ட குறிப்பாணையைக் கூர்ந்து படிக்கும் பொழுது, நாம் அறிவது, தகப்பனார், தாயார், மனைவி போன்ற குடும்ப உறுப்பினர்களின் பெயரிலுள்ள நிலத்திற்கு விவசாய மின்னிணைப்பு கோரும் விண்ணப்பம் சமர்ப்பித்து விட்டு, விண்ணப்பதாரர் தயார் நிலையைப் பதிவு செய்ய 90 நாள் அறிவிப்பு கிடைத்த பின்பு, பெயர் மாற்றம் கோருகின்றனர் என்ற காரணத்தினால் கீழ் கண்ட உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

(i) மின்னிணைப்பு நிலத்தின் உரிமையாளரின் பெயரில் புதிய விண்ணப்பம் பெற்று ஏற்கனவே உள்ள முன்னுரிமையில் வழங்கலாம்.

(ii) மின்னிணைப்பு விண்ணப்பம் செய்தவர் பெயரில் வழங்கலாம். நிலத்தின் தற்போதைய உரிமையாளர், நிலத்தின் உரிமையை விண்ணப்பதாரரின் பெயருக்கு மாற்றி கொடுக்கும் பட்சத்தில் அதே முன்னுரிமையில் வழங்கலாம்.

(iii) விண்ணப்பதாரர் பெயரில் அதே முன்னுரிமையில் மின்னிணைப்பு வழங்கலாம். நிலத்தின் உரிமையாளர், அவ்வாறு மின்னிணைப்பு வழங்க தனக்கு ஆட்சேபணை இல்லை என்று தெரிவிக்கும் பட்சத்தில், மேலும், சட்டப்படியான வாரிசுதாரர்கள் என்ற நிலையில் கிராம நிர்வாக அலுவலரின் சான்றும், மன்ற உரிமையாளர்களின் சம்மதமும் வேண்டும்.

**11.6.** மேற்கண்ட உத்தரவின்படி, கிணறு இருந்த நிலம், கச்சம்மாளின் புதல்வர்களுக்கு தான செட்டில்மெண்ட் பண்ணியிருந்த போதிலும் புதல்வர்கள் அனைவரும், தங்களின் தாயார் திருமதி கச்சம்மாள் பெயரில் மின்னிணைப்பு வழங்கலாம் என்று சம்மதம் அளிக்கும் பட்சத்தில் மின் இணைப்பை திருமதி. கச்சம்மாள் என்ற பெயரில் வழங்க முடியும் என்று அறிய முடிகிறது.

**11.7.** ஆனால், அவ்வாறு, ஏதேனும் சம்மதம் கடிதம் பெறப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்ய, எதிர்மனுதாரார் சார்பில் தயார் நிலை பதிவு செய்யும் பொழுது நுகர்வோரிடமிருந்து பெறப்பட்ட ஆவணம் எதுவும் இல்லை என்பதால், சரி பார்க்க முடியவில்லை.

**11.8.** ஆனால், மேல் முறையீட்டாளர், தனது தந்தையும், திருமதி கச்சம்மாளின் வாரிசு தான் என்றும் அந்த தான செட்டில்மென்டில் உள்ளவர் என்றும், ஆனால் அவர் அந்த மாதிரி சம்மத கடிதம் எதுவும் வழங்கவில்லை என்று வாதிட்டுள்ளார்.

**11.9.** இந்த வழக்கில், மின்னிணைப்பு வழங்கப்பட்ட சர்வே எண் 330 ல் உள்ள 35 செண்ட் நிலமும், கிணறும், திருமதி கச்சம்மாள் அவர்களால் 22.6.1993 ம் ஆண்டு தன்னுடைய ஐந்து மகன்களுக்கும் தான செட்டில்மென்ட் பண்ணியுள்ளார் என்று தெரிகிறது. திருமதி

கச்சம்மாளின் மகன்களான திரு.பாலகிருஷ்ணன், ராமசாமி மற்றும் தாமோதரன் அவர்களும் மேற்கண்ட சொத்தை தான் கொடுத்த கடனுக்காக டிகிரி பண்ணியுள்ள மெசர்ஸ் நாராயணசாமி அய்யர் அன்டு கோ மற்றும் கச்சம்மாள், அவரது மகன்கள் திரு துரைசாமி, தண்டபாணி ஆகியோரை எதிர் மனுதாரர்களாக சேர்த்து குளித்தலை டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட்டில் மேற்கண்ட சொத்து, தங்களுக்கு தங்களுடைய தாயாரினால் 22.6.1993 ல் தான செட்டில்மென்ட் பண்ணப்பட்ட சொத்து. எனவே 21.6.1996ல் டிகிரி செய்யப்பட்டு 18.8.1997–ல் இடப்பட்ட ஜப்தி உத்திரவை நீக்க வேண்டுமென்று வழக்கு தொடுத்துள்ளார்கள். ஆனால், அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றும் மேல் முறையீட்டாளர் வாதிட்டுள்ளார்.

11.10. ஆனால் மேற்கண்ட சொத்து வழக்கு எண் 1088/95 ல் 21.6.96 ல் டிகிரி ஆனபடி 18.8.97 ல் ஜப்தி நடவடிக்கை அனுமதி பெற்று 6.9.2000 ல் ஏலத்தில் விற்கப்பட்டு விட்டது என்பதும் வாதங்களின் மூலமாகவும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் மூலமாகவும் தெரிகின்றன. எனவே, நீதிமன்றம் திருமதி கச்சம்மாள் தான் மேற்கண்ட சொத்தின் உரிமையாளர் என்று அவரின் கடனுக்காக மேற்கண்ட நிலத்தை ஏலம் விட்டு உள்ளது. எனவே, ஏலம் விடும் வரை திருமதி கச்சம்மாவை உரிமையாளர் என்று நீதிமன்றம் கருதியுள்ளதால், மேல் முறையீட்டாளரின் வாதமான 22.10.1996 ல் மின்னிணைப்பு வழங்குவதற்கு முன்பாக திருமதி கச்சம்மாள் தன்னுடைய மகன்களுக்கு 22.6.1993–ல் தான செட்டில்மென்ட் பண்ணிவிட்டதால் அவர் உரிமையாளர் அல்ல என்ற வாதம் ஏற்புடையதல்ல என்று தீர்வு செய்கிறேன்.

12. <u>வழக்கெழு வினா இரண்டிற்கான தீர்வு:</u>

12.1. மேல்முறையீட்டாளர் மின்னிணைப்பு வழங்கப்பட்டுள்ள கிணறு உள்ள சர்வே எண் 330 ல் உள்ள நிலம் நாராயணசாமி அய்யர் அண்டு கோ அவர்களால், தங்களுக்கு வர வேண்டிய

கடன் தொகைக்காக. நீதி மன்றம் மூலம் வழக்கு எண் **1088/95** ல் **21.6.1996** ல் டிகிரி செய்யப்பட்டுள்ளது. எனவே, திரு. கச்சம்மாள் மேற்கண்ட நிலத்தின் உரிமையை டிகிரி ஆன **21.6.1996**ல் இழந்து விட்டார். ஆனால், மேற்கண்ட கிணற்றிற்கு **22.10.1996** ல் விவசாய மின்னிணைப்பு வழங்கப்பட்டுள்ளது. உரிமை இழந்தவர் பெயரில் மின்னிணைப்பு வழங்கியது தவறு என்று வாதிட்டுள்ளார்.

**12.2.** எதிர் மனுதாரர் வாரியத்திற்கு, மேற்கண்ட கிணறு உள்ள நிலம் டிகிரி ஆகி உள்ளது என்ற விவரம் தெரியாது. மேலும், மேற்கண்ட நிலம் டிகிரி ஆனாலும், ஏலம் **6.9.2000** ல் தான் விடப்பட்டு நிலம் திரு. சதாசிவம் என்பவரால் **14.11.2000** ல் நீதிமன்றத்தால் விற்பனை உறுதி செய்யப்பட்டுள்ளது. எனவே, மின்னிணைப்பு வழங்கிய **22.10.1996**ல் திருமதி கச்சம்மாள்தான் உரிமையாளர் என்று வாதிட்டுள்ளார்.

**12.3.** மின்னிணைப்பு வழங்கும் பொழுது மேற்கண்ட கிணறு உள்ள இடம் டிகிரி செய்யப்பட்டு இருந்தாலும், **6.9.2000** ல் ஏலம் விடப்பட்டு **14.11.2000** ல் தான் விற்பனை உறுதி செய்யப்பட்டுள்ளது என்பதால், திருமதி கச்சம்மாள் தான் மின்னிணைப்பை பெறும் பொழுது உரிமையாளர் என்ற வாதம் எனக்கு ஏற்புடையதாக உள்ளது என்று தீர்வு செய்கிறேன்.

**13.** <u>**வழக்கெழு வினா மூன்றிற்கான தீர்வு:**</u>

**13.1.** மேல் முறையீட்டாளர் திரு. தாமோதரன் அவர்களின் பெயருக்கு மின்னிணைப்பு எண் **73** ஐ பெயர் மாற்றம் செய்தது தவறு என்பதற்காக கீழ்கண்ட வாதங்களை முன் வைத்துள்ளார்.

**(i)** திரு. தாமோதரன் சர்வே எண்.**330**ல் உள்ள கிணற்றை திரு. சதாசிவம் என்பவரிடமிருந்து **15.6.2005**ல் கிரைய ஆவண எண். **804/2005**ன் மூலம் கிணறும் அதன் சுற்றியுள்ள இடத்தை மட்டுமே கிரையம் பெற்றுள்ளார்.

(ii) திருமதி. கச்சம்மமாள் என்கிற மின் நுகர்வோரிடமிருந்து மின்நுகர்வோர் எண்.73ஐ மட்டும் 31.8.2009ல் கிரைய ஆவண எண். 222/2009ல் மின்இணைப்பை விற்பனை செய்துள்ளார். தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித்தொகுப்பு 2004, விதி 2(g) ன் படி திருமதி. கச்சம்மாள் மின் நுகர்வோர் மட்டுமே, ஆனால், மின் உரிமையாளர் தமிழ்நாடு மின்சார வாரியம் மட்டுமே ஆகும். இந்நிலையில் இவர் உரிமைதாரர் போன்று விற்பனை செய்துள்ளார்.

(iii) திரு. தாமோதரன் மின்சார ஒழுங்குமுறை விதி 5(7)ன் படி படிவம் ஒன்று (1) அல்லது இரண்டு (2) அளிக்கவில்லை. வாரியமும் பெறவில்லை, பெயர் மாற்றம் செய்ய வாரிய விதிமுறைகளின்படி இப்படிவங்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

(iv) திரு. தாமோதரன் அளித்த விண்ணப்பங்களில் விண்ணப்ப தேதி 1.10.2009, 24.11.2009 என இரு தேதிகள் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே இவ்விண்ணப்பமே குழப்பமானதாகும்.

(v) 24.11.2009 விண்ணப்பம் பெறப்பட்டு மறு நாளே பெயர் மாற்ற உத்தரவு வழங்கப்பட்டது. ஏதோ உள்நோக்கம் கொண்டதாக தெரிகிறது.

(vi) இவ்வாறாக மின்இணைப்பு அமைந்துள்ள இடத்தை ஒருவரிடமும் (சதாசிவம்) மின்இணைப்பை ஒருவரிடமும் (கச்சம்மாள்) கிரையம் பெற்று பெயர் மாற்றம் விண்ணப்பம் செய்த பெயர் மாற்ற உத்தரவை ரத்து செய்ய கோருகிறார்.

13.2 எதிர்மனுதாரர், பெயர் மாற்றம் உரிய விதிமுறைகளின்படியே செய்யப்பட்டது எனவும் கூறியுள்ளார். இதற்கு ஆதாரமாக சட்டப்பிரிவு விதிமுறைகள் எதையும் தெரிவிக்க வில்லை. மின் வழங்கும் உரிமை, உரிமைதாரர் என்ற நிலையில் இருந்து நுகர்வோருக்கு மின் இணைப்பை வழங்குவது மின்சார வாரியம் மட்டுமே எப்பொழுதும் எந்நிலையிலும் உரிமைதாரர் என்கிற உரிமை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மட்டுமே உண்டு நுகர்வோராக உள்ளவர்கள் இடம் அல்லது நிலம் அதில் அமைந்துள்ள மின்இணைப்பு ஆகியவற்றை ஒன்றாகத்தான் விற்பனை செய்ய

வேண்டும். தனித்தனியாக வெவ்வேறு நபர்கள் இடம், மின்இணைப்பை விற்பனை செய்ய வாரிய விதிமுறைகள் அனுமதிப்பதில்லை.

13.3. எதிர் மனுதாரர் திருமதி. கச்சம்மாள் அவர்கள் மகனான திரு. தாமோதரன் அவர்கள் 24.11.2009 ல் மேற்படி மின்னிணைப்பினை அவரது பெயருக்கு பெயர் மாற்றம் கோரி மனு செய்தார். அவரது மனுவுடன் கீழ்கண்ட ஆவணங்கள் இணைத்து சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

அவை :

1. மின்னிணைப்பு பெயர் மாற்றம் செய்யக்கோரும் படிவம்
2. கிராம நிர்வாக அலுவலர் நான்குமால் சான்று
3. மின்கட்டண அட்டை நகல்
4. வரி வாய்தா ரசீது
5. மின்னிணைப்பு அமைந்துள்ள நிலத்தின் வரைபடம்
6. சிட்டா நகல்
7. அடங்கல்
8. கிரைய பத்திர நகல் ஆவண எண் 804/2005, 222/2009
9. பிணையுறுதி பத்திரம்
10. ஒப்பந்தம்

13.4. சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து ஆவணங்களும் முறையாக பரிசீலிக்கப்பட்டு மனு செய்த நகலில் மேற்படி மின்னிணைப்பிற்கு முழு உரிமையாளர் திரு. தாமோதரன் தான் என்பதை உறுதி செய்த பின்னர் 25.11.2009 ல் மேற்படி மின்னிணைப்பு திருமதி கச்சம்மாள் பெயரிலிருந்து அவரது மகனான திரு. தாமோதரன் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று வாதிட்டுள்ளார். மேலும், பெயர் மாற்றத்திற்காக பெறப்பட்ட ஆவணங்களின் நகலையும் சமர்ப்பித்துள்ளார்.

13.5. பெயர் மாற்றத்தைப் பொருத்த வரையில் நீதிமன்ற தாவா குறித்து ஏதும் தெரியாத நிலையிலும், மின் நுகர்வோரோ பங்குதாரரோ ஆட்சேபணை ஏதும் தெரிவிக்காத சூழலில் புல எண் 330 ல் உள்ள 0.35 செண்ட் நிலமும், அதில் அமைந்துள்ள கிணற்றின் (ஆவண எண் 804/2005) முழு உரிமையும் திருமதி கச்சம்மாளுக்கு இருந்ததாகக் கருதி

மின்னிணைப்பு எண் தனியாக ஆ.எண் 222/2009 ல் அதுவும் திரு. தாமோதரன் த/பெ நாராயணசாமி என்பவரின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்தாலும் ஒரே உரிமையாளர் என்ற வருவாய்துறை ஆவணங்களின் அடிப்படையிலும் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

13.6. மேலும் தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பு 2004 விதி 5(7) ன்படி பாரம் (1) என்பது மின்னிணைப்பு வழங்கப்பட்ட சொத்திற்கு உரிமைதாரர் யார், அதற்கு அவர் இணைக்கும் சட்டப்பூர்வ ஆவணம் எது என்பதை தெரிவிக்கும் பாரம் மட்டுமே.

13.7. மேலும் பாரம் (2) என்பது மின்னிணைப்பு அமைந்துள்ள சொத்தின் உரிமைதாரர் மின்னிணைப்பின் பெயரை மாற்ற தரும் கடிதம் மட்டுமே. இவை இரண்டும் சாதாரண வெள்ளை தாளில் வழங்கினால் கூட போதுமானது. இதற்கு பதிலாக மின்னிணைப்பு பெயர் மாற்றம் செய்ய சொத்தின் உரிமைதாரரான திருமதி கச்சம்மாள் பதிவு செய்யப்பட்ட விற்பனை ஆவணமாக வழங்கியுள்ளார்.

13.8. எனவே மின்னிணைப்பு வழங்கியதும் பெயர் மாற்றம் செய்ததும் சட்டப்பூர்வ ஆவணங்களின் அடிப்படையிலேயே செய்யப்பட்டுள்ளது. மின்னிணைப்பு வழங்கும் பொழுதோ பெயர் மாற்றம் செய்த பொழுதோ நீதி மன்ற வழக்கு நிலுவை, டிகிரி ஆனது எதுவும் வாரியத்திற்கு தெரியாது என்பதாலும், மனுதாரர் தற்போது கோரும் கோரிக்கை காலம் கடந்தது மட்டுமல்லாமல் தற்போதைய சூழலில் மின் நுகர்வோர் திரு.தாமோதரன் பெயரில் சொத்தும் கிணறும், மின்னிணைப்பு அனுபவ பாத்தியத்திலும் உள்ளது சட்டப்படி சரியே என பணிவுடன் தெரிவிக்கப்படுகிறது.

13.9. மேற்கண்ட பெயர் மாற்றம் சரி தான் என்பதை தெரிந்து கொள்ள நாம் மின் வழங்கல் விதித் தொகுப்பின் விதி 5 (7) ஐ ஆராய வேண்டும். அந்த விதி 5 (7) கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"5. Miscellaneous Charges : xxx xxx xxx xxx xxx xxx xxx xxx xxx*
> *(7) Name Transfer charge*
> *(i) Every application for transfer of name consequent to the death of the consumer shall be in Form (1) in Appendix to this code accompanied by :*

*(a) Legal heirship certificate from the Tahsildar concerned or proof of ownership such as local body tax receipts (latest).*
*(b) No objection certificate from other legal heirs, if any, (or) an indemnity bond in Form (3) in Appendix to this Code on non-judicial stamp paper for a value of Rs.80/- and a sworn-in affidavit and authenticated by a Notary Public or by a gazetted officer to show the status of other legal heirs.*
*(c) Fresh application with fee to be specified by the Commission and agreement form.*
*(ii) Every application for transfer of name, in other cases, shall be in Forms (1) and (2) in Appendix to this Code accompanied by*
*a) The document supporting the transfer with an undertaking in Form (4) in Appendix to this Code*
*b) Consent letter from the consumer for the transfer of the Security Deposit if it is not included in the document supporting the transfer*
*c) Fresh application with fee to be specified by the Commission and agreement form. Explanation: The name transfer is effected only for such services which are not under disconnection.*

13.10. மேற்கண்ட விதிகளை கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது ஒரு மின்இணைப்பின் பெயர் மாற்றம் ஒரு நுகர்வோர் இறந்தால் எப்படி செய்யப்படவேண்டும் என்று மின்வழங்கல் விதித்தொகுப்பின் விதி 5(7)(i)ல் விவரிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு இல்லாமல் மற்றநேர்வில் மின்இணைப்பின் பெயர்மாற்றம் எவ்வாறு செய்யப்படவேண்டும் என்பது மின்வழங்கல் விதித்தொகுப்பின் விதி 5(7) (ii)ல் விவரிக்கப்பட்டுள்ளது.

13.11. விவசாய மின்னிணைப்பு எண் 73 ன் பெயர் மாற்றம் விற்பனை மூலம் என்பதால் அது 5(7)(ii) ன்படிதான் இருக்கவேண்டும் என்பதால் அந்த விதிகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

(அ) பெயர்மாற்றம் கோரும் விண்ணப்பங்கள் மின்வழங்கல் விதித்தொகுப்பின் பின்னிப்பிலுள்ள படிவம் (1)மற்றும் (2)ன்படிதான் இருக்கவேண்டும். மேலும், பிற்கண்ட ஆவணங்களையும் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

(a) வழங்கல் விதித்தொகுப்பின் பின்னிணைப்பில் உள்ள படிவம் (4)ல் உள்ள உறுதிஏற்புடன் பெயர் மாற்றத்திற்கான அடிப்படை ஆவணம்.

(b) காப்புவைப்புத்தொகை மாற்றம் சம்பந்தமாக பெயர்மாற்றத்திற்கான அடிப்படை ஆவணத்தில் எதுவும் கூறப்படவில்லை என்றால் காப்புவைப்புத்தொகை மாற்றுவதற்கான நுகர்வோரின் சம்மதக்கடிதம் , அத்தகைய கடிதம் தரப்படாவிடில் புதிதாக காப்புத்தொகை கட்டவேண்டும்.

(c) ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணம், புது விண்ணப்பம் மற்றும் இசைவு பத்திரம்.

13.12. மேலும், பெயர்மாற்றத்திற்கான விண்ணப்பம் படிவம் (1) மற்றும் (2)ன்படி இருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளதால் அந்த படிவங்களின் மாதிரி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*[Appendix] FORM-1 [Refer to Regulation 5(7)]*

*To The Designated Engineer,*
*……………………………*

*I, Thiru ...................................... (S/o)/ (D/o)/ (W/o) .................................... aged 55. Years, am residing at 22 (Full Address & Phone No.)............... .....................*
*The premises bearing Door No. ............... Name of Street.....................................*
*Village / Town ……………. . Taluk with Service Connection No. ...... Tariff ………………… Distribution ……………………………. In the name of ……………*
*S/o…………………. is in my possession.*
*(1) The Xerox copy of the sale deed in my favour for the said premises is enclosed.*
*or*
*The property tax receipt for the above property is given in my name and Xerox copy of the same duly attested by Gazetted Officer is enclosed.*
*or*
*Metro Water / Sewerage Connection is given in my name and the Xerox copy of the same duly attested by Gazetted Officer is enclosed.*
*or*
*Legal Heirship Certificate from the Tahsildar concerned*
*(2) Application and Agreement Form*
*(3) Indemnity Bond on Rs.80/- Non-judicial stamp paper ( Applicable in the case of name transfer due to legal succession)*
*I undertake to pay amounts outstanding against the Account No. ……….. which are found to be due at a later date.*
*I request that the name of Service No. ……… may kindly be changed to my name.*

*Signature of transferee,*
*Full Address.*

*Place:*
*Date :*

*FORM-2*

*NAME TRANSFER FORMS [REFER TO REGULATION 5 (7)]*

*(To be used as a consent letter from transferor in case of sale etc.)*

*To The Designated Engineer /………*

*Address of the Licensee Engineer*

*I..........................................(S/o. D/o. W/o.) ........................................owner of premises bearing Door No. .............(Name of the Street …... Place ………...) hereby give my consent for the transfer of service bearing A/c. No. .................standing in my name / in the name of ………… to Thiru/Tmty.] ......................................S/o. D/o. W/o. .........................................since I had sold my house to him/her.................................. The transfer may be effected with available deposit / subject to the condition that the transferee pays the security deposit and other charges *.*

*Signature of transferor,*
*Full Address.*

*Place*
*Date*
** Strike out the portion not required"*

**13.13.** மேற்கண்ட படிவங்களை கூர்ந்து ஆராயும்பொழுது நாம் அறிவது படிவம் **(1)** என்பது மின்இணைப்பின் பெயர் மாற்றம் கோருவோர் பெயர் மாற்றத்திற்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பம் ஆகும். அதில் மின்இணைப்பு உள்ள இடம் அவருக்கு உடமை என்பதற்கான ஆவணத்தின் நகலையும் இணைக்க வேண்டும். '

**13.14.** படிவம்**(2)** என்பது, மின்இணைப்பு யாரின் பெயரில் உள்ளதோ அவர் மேற்கண்ட மின்இணைப்பின் பெயர்மாற்றத்திற்கு சம்மதம் தெரிவிக்கும் சம்மதக்கடிதம் ஆகும். அந்தசம்மத கடிதத்தில் மின்இணைப்பின் கணக்கிலுள்ள வைப்பு தொகையுடன் பெயர் மாற்றம் செய்யலாம் என்றோ அல்லது வைப்பு தொகையில்லாமல் பெயர் மாற்றம் செய்யலாம் என்றோ மேற்கண்ட மின்இணைப்பின் உரிமையாளர் தெரிவிக்கலாம்.

13.15. பெயர் மாற்றம், மேற்கண்ட விதிகளின்படி உள்ளதா என்பதை அறிய நாம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்களை ஆராய வேண்டும். கீழ்கண்ட ஆவணங்களை, திரு. தாமோதரன் அவர்கள் சமர்ப்பித்துள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

1. மின்னிணைப்பு பெயர் மாற்றம் செய்யக்கோரும் படிவம்
2. கிராம நிர்வாக அலுவலர் நான்குமால் சான்று
3. மின்கட்டண அட்டை நகல்
4. வரி வாய்தா ரசீது
5. மின்னிணைப்பு அமைந்துள்ள நிலத்தின் வரைபடம்
6. சிட்டா நகல்
7. அடங்கல்
8. கிரைய பத்திர நகல் ஆவண எண் 804/2005, 222/2009
9. பிணையுறுதி பத்திரம்
10. ஒப்பந்தம்

13.16. மின்சார வழங்கல் விதிப்படி பெயர் மாற்ற விண்ணப்பம். படிவம் (i) மற்றும் (ii) இரண்டின்படி இருக்க வேண்டும்.

13.17. மின்இணைப்பின் பெயர் மாற்றக்கோரி சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தின் உண்மை நகல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“தமிழ்நாடு மின்சார வாரியம்*
*மின்இணைப்பு பெயர் மாற்றம் செய்யக் கோரும் விண்ணப்பம்*
*பெறுநர்*
*உயர்திரு உதவி கணக்கு அலுவலர் அவர்கள்*

| | |
|---|---|
| *வீட்டு மின்இணைப்பு* | |
| *விவசாய மின்இணைப்பு* | |
| *தொழில் மின்இணைப்பு* | |

*ஐயா,*

*கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், தேவர்மலை கிராமம், குடிவண்டையில் வசித்து வரும் நாராயணசாமி நாயுடு மனைவி கச்சம்மாள் அகிய நான் எனது பெயரில் நரியம்பட்டி பகிர்மானத்தில் உள்ள 73 (TF IV) எண்ணுள்ள மின் இணைப்பை தாமோதரன் என்ற பெயருக்கு என்னால் கட்டப்பட்ட உத்திரவாதத் தொகையுடன் உத்திரவாதத் தொகையின்றி . . . .ம் தேதியில் மாற்றிக் கொடுக்க ஒப்புக்கொண்டு மேற்படி நபருக்கு சுவாதீனம் கொடுத்துவிட்டேன் என்றும் ஆகையால் என் பெயரில் உள்ள மின் இணைப்பை மேற்படி நபரின் பெயருக்கு மாற்றித்தர வேண்டிய தொகைகள் அனைத்துக்கும் இனிமேல் இம்மின் இணைப்பை பொருத்தவரையில் மின் இணைப்பை மாற்றிக் கொண்டவரே முழுப்பொறுப்பபாளியாவார் என்றும் இனி ஏற்படும் அனைத்து கணக்குகளுக்கும் அவரே பொறுப்பு என்றும் நான் ஒப்புக்கொண்டு மின் இணைப்பை அவர் பெயருக்கு மாற்றிக் கொடுக்கும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.*

*நாள் :* *ஒப்பம் / XX XX XX*

*(கச்சம்மாள் இடது கை பெருவிரல் ரேகை)*
*மாற்றி கொடுப்பவர் கையொப்பம்*

*கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், தேவர்மலை கிராமம், குடிவண்டையில் வசித்து வரும் (லேட்) நாராயணசாமி மகன் தாமோதரன் அகிய நான் கச்சம்மாள் அவர்களின் பெயரில் நரியம்பட்டி பகிர்மானத்தில் உள்ள 73 (* TF IV*) எண்ணுள்ள மின் இணைப்பை என் பெயரில் உத்தரவாதத் தொகையுடன் உத்திரவாதத் தொகையின்றி மாற்றிக் கொள்ள ஒப்புக்கொண்டு . . . ம் தேதியில் மேற்படி நபரிடமிருந்து சுவாதீனம் பெற்றுக்கொண்டு விட்டேன். நான் மின்சார வாரியத்தில் சகல சட்ட திட்டங்களுக்கும் கட்டுப்பட்டு நடக்க ஒப்புக்கொள்கிறேன். மேலும், நான் மேற்படி மின் இணைப்பை பொருத்து வாரியத்திற்கு செலுத்த வேண்டிய தொகைகளுக்கும் பெயர் மாற்றுக் கட்டணத்துக்கும் நிலுவை பிடித்தம் ஆகியவைகளுக்கு இனிமேல் நானே முழுப் பொறுப்பும் ஏற்றுக் கொண்டு இம்மின் இணைப்பின் கணக்கை இனி என் பெயரில் மாற்றிக் கொடுக்க கேட்டுக் கொள்கிறேன்.*

*நாள் : 01.10.2009*

*சாட்சிகள் (முழு முகவரியுடன்)*

*1. R. பாலுச்சாமி, S/o ரங்கசாமி*
*குடிவண்டை. குருணிகுளத்துப்பட்டி PO*
*சிந்தாமணிப்பட்டி வழி, கரூர்.*

*2.* P. *தண்டபாணி,* S/o *பெருமாள்*
*குடிவண்டை. குருணிகுளத்துப்பட்டி PO*
*சிந்தாமணிப்பட்டி வழி, கரூர்.*

*ஒப்பம்/xxx xxx xxx(தாமோதரன்)*
*மாற்றிக் கொள்பவர் கையொப்பம்*

**13.18.** படிவம் 1 என்பது பெயர் மாற்றம் கோருவோர் அளிக்கும் விண்ணப்பம் ஆகும். திரு.தாமோதரன் படிவம் 1 ற்கு பதில் ஒரு விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார். அதிலுள்ள வாசகங்கள் படிவம் ஒன்றின்படி அப்படியே இல்லை எனினும், அதிலுள்ள கருத்துக்களின்படி தான் உள்ளது. எனவே, அந்த விண்ணப்பம், படிவம் ஒன்றுக்கு இணையானது என்று எடுத்துக் கொள்ளலாம் என்று நான் தீர்வு செய்கிறேன். மேலும், அவர் மேற்கண்ட நிலத்தையும் கிணற்றுடன் திரு. சதாசிவம் அவர்களிடமிருந்து கிரயமாக பெற்றுள்ளார். அதற்கான விற்பனை பத்திரத்தின் நகல் மற்றும் அடங்கலின் நகல் ஆகியவற்றையும் மேற்கண்ட சொத்து அவருக்கு சொந்தமானது என்பதற்கு ஆதாரமாக அளித்துள்ளார்.

**13.19.** படிவம் இரண்டு என்பது, மின்னிணைப்பு யாரின் பெயரிலிருந்து மாற்றப்பட வேண்டுமோ, அவர் அந்தப் பெயர் மாற்றத்திற்கு சம்மதம் தெரிவிக்கும் கடிதம் ஆகும். இங்கு திருமதி கச்சம்மாள் அவர்கள், தன்னுடைய பெயரிலிருக்கும் மின்னிணைப்பை திரு.தாமேதரன் பெயரில் மாற்ற சம்மதம் கொடுத்துள்ளார். இதிலும் படிவத்தின்படி மேற்கண்ட கடிதம் இல்லை. ஆனால் கருத்துக்களில் வேற்றுமை இல்லை. எனவே, மேற்கண்ட ஒப்புகை கடிதம்

படிவம் இரண்டிற்கு இணையானது என்று எடுத்துக்கொள்ளலாம் என்று தீர்வு செய்கிறேன். மேலும், உரிமதாரர், இனிவரும் காலங்களில் தமிழ்நாடு மின் வழங்கல் விதியில் கொடுக்கப்பட்டுள்ள படிவங்களின்படி விண்ணப்பங்களை பெற்று நடவடிக்கை எடுக்கும்படி அறிவுறுத்தப்படுகிறது.

**13.20.** மின் வழங்கல் விதித்தொகுப்பின் விதி 5(7)(ii)ன் படி மின்இணைப்பு கோரும் விண்ணப்பம் மற்றும் இசைவு பத்திரம் மற்றும் undertaking in Form-4 ஆகியவைகளும் சமர்ப்பித்துள்ளார். இவைகளை தவிர, Indemnity Bond-ஐயும் சமர்ப்பித்துள்ளார். எனவே, பெயர் மாற்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் மின் வழங்கல் விதித்தொகுப்பின் விதி 5(7)(ii)ற்கு இணங்க உள்ளது என்று தெரிகிறது.

**13.21.** மேல் முறையீட்டாளர், மேற்கண்ட மின்னிணைப்பு உள்ள இடம் திரு. தாமோதரன் அவர்களால், திரு.சதாசிவம் அவர்களிடமிருந்து விலைக்கு வாங்கப்பட்டுள்ளது. திரு.சதாசிவம் அந்த நிலத்தை நீதிமன்ற உத்தரவின்படி ஏலம் விடப்பட்ட நிலத்தை ஏலத்தில் பெற்றுள்ளார். ஆனால், அந்த ஏலம் பெற்ற சொத்தின் ஆவணத்தில் விவசாய மின்னிணைப்பு எண், இடம் பெறவில்லை. திரு. தாமோதரன் அவர்கள் மின்னிணைப்பு மோட்டார் ஆகியவற்றை திருமதி கச்சம்மாளிடமிருந்து விலைக்கு வாங்கி அதைப் பதிவு செய்து அதன் காரணமாக மின்னிணைப்பை மாற்ற வேண்டும் என்று கோரியுள்ளார். நிலத்தையும், கிணற்றையும் ஏலத்தில் விற்ற பின்பு, மின்னிணைப்பை மட்டும், அவருக்கு உரிமை என்று எவ்வாறு விற்பனை செய்ய முடியும் என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

**13.22.** எதிர் மனுதாரர், அந்த மின்னிணைப்பு திருமதி. கச்சம்மாள் பெயரில் வழங்கிய பின்பு தான் நிலம், கிணறு ஆகியவை ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு, திரு. சதாசிவம் அவர்களால் வாங்கப்பட்டுள்ளது. அவ்வாறு விலைக்குப் பெறப்பட்ட மேற்கண்ட நிலத்தையும், கிணற்றையும், அவரிடமிருந்து திரு.தாமோதரன் அவர்கள் விலைக்கு வாங்கியுள்ளார்.

தற்பொழுதுள்ள உரிமை ஆவணத்தின்படி அவர் தான் மின்னிணைப்பு உள்ள கிணற்றின் உரிமையாளர் அதற்கு ஆதாரமாக, விற்பனைப் பத்திரம், கிராம நிர்வாக அலுவலர் சான்று, சிட்டா அடங்கல் ஆகியவைகளையும் சமர்ப்பித்துள்ளார். எனவே, அவரின் பெயருக்கு மின்னிணைப்பின் பெயரை மாற்றியது சரிதான் என்றும் வாதிட்டுள்ளார். திரு. சதாசிவம் பெயருக்கு திருமதி கச்சம்மாவின் பெயரிலிருந்து மின்னிணைப்பு மாற்றவில்லை என்பதால், ஏற்கனவே உள்ள பெயரிலிருந்து, தற்பொழுது உரிமை உள்ளவரின் பெயருக்கு மாற்றப்பட்டுள்ளது என்பதால், திருமதி கச்சம்மாள் அவர்களின் விற்பனை பத்திரம், சம்மதக்கடிதமாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது என்று வாதிட்டுள்ளார்.

**13.23.** திருமதி கச்சம்மாளின் உரிமையிலிருந்த சர்வே எண் **330** ல் **35** செண்ட் நிலமும், கிணறும் ஏலத்தில் திரு சதாசிவம் அவர்களால் **6.9.2000** ல் விலைக்கு வாங்கப்பட்டுள்ளது. அப்பொழுது மின்னிணைப்பு அந்த கிணற்றில் உள்ளது. ஏனெனில் மின்னிணைப்பு கொடுத்த நாள் **22.10.96** ஆகும். ஆனால், விவசாய மின்னிணைப்பு எண், ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட ஆவணத்தில் இல்லை. ஏனெனில் டிகிரி ஆகும்பொழுது அந்த கிணற்றில் மின்இணைப்பு கொடுக்கப்படவில்லை. அந்த நிலமும், கிணறும் திரு.தாமோதரன் அவர்களால் **15.5.2005**ல் திரு. சதாசிவம் அவர்களிடமிருந்து விலைக்கு வாங்கப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தில், மின்சார இணைப்பு இடம் பெறவில்லை.

**13.24.** எனவே, மின்னிணைப்பு எண் முதலில் திருமதி. கச்சம்மாவிடமிருந்து திரு சதாசிவம் அவர்களின் பெயருக்கு மாற்றம் அடைந்து பின்னர் திரு சதாசிவம் அவர்களின் பெயரிலிருந்து திரு.தாமோதரன் பெயருக்கும் மாற்றப்பட்டிருக்க வேண்டும். ஆனால், மின்னிணைப்பு எண் **73** ன் பெயர் மாற்றம் திருமதி. கச்சம்மாளிடமிருந்து திரு. சதாசிவம் அவர்களுக்கு மாற்றப்படவில்லை. திரு. சதாசிவம் அவர்கள், திருமதி கச்சம்மாள் அவர்களின் சம்மதக் கடிதத்துடன் மின் இணைப்பின் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்து

பெயர் மாற்றம் செய்திருக்க வேண்டும். அவ்வாறு செய்யப்படவில்லை என்பது ஒரு Procedural lapse ஆகும். (அதற்கு, உரிமதாரரான திரு. தாமோதரன் அவர்கள் பொறுப்பாக மாட்டார்).

13.25. ஆனால், தற்பொழுது திரு. தாமோதரன் அவர்கள் தான் அந்த மின்னிணைப்பு வழங்கப்பட்டுள்ள கிணற்றிற்கும் 35 செண்ட் நிலத்திற்கும் உரிமையாளர் ஆவார். அந்த கிணற்றில் தான் மேற்கண்ட மின்இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. அவர்தான் அந்த மின்இணைப்பையும் உபயோகித்து வருகிறார் என்றும் எதிர்மனுதாரர் வாதிட்டுள்ளார். மேலும், அந்த மின்இணைப்பின் (agreement holder) ஆன திருமதி. கச்சம்மாளும் மின் இணைப்பை மாற்ற சம்மதம் கொடுத்துள்ளார். எனவே, அந்த மின்னிணைப்பை அவர் பெயருக்கு மாற்றப்பட்டது சரிதான் என்று தீர்வு செய்யப்படுகிறது.

14. <u>**முடிவுரை :**</u>

14.1 என்னுடைய வழக்கெழு வினா ஒன்று, இரண்டு மற்றும் மூன்றிற்கான தீர்வின்படி, கரூர் மின் பகிர்மான வட்டத்தின் மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத்தின் தீர்வில் நான் மாற்றம் எதுவும் செய்ய முடியாது என்று தீர்வு செய்கிறேன்.

14.2 மேற்கண்ட தீர்வின் மேல் முறையீட்டு மனு எண் 81/2015 முடிவுக்குக் கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. B. சந்திரசேகரன்,
எண் 3, மறுமலர்ச்சி இல்லம்,
கோட்டைத்தெரு,
ஆலங்காயம் அஞ்சல்,
வாணியம்பாடி வட்டம்,
வேலூர் மாவட்டம்.

2)  மேற்பார்வை பொறியாளர்,
கரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கோவை ரோடு,
கரூர் – 639 002.

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
கரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கோவை ரோடு,  கரூர் – 639 002.

4) தலைவர்  மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5)  செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி  லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

6)  உதவி இயக்குநர் (கணினி)  –  <u>மின் குறைதீர்ப்பாளரின்  இணையதளத்தில்  வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி  லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.